## தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வருவதைக் கண்டு – பொறாமையால்

# தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்கப் பார்க்கிறார் எடப்பாடி பழனிசாமி!

## தலைமைச் செயலக வளாகத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

**சென்னை, மார்ச் 30-**

**சட்டத்துறை அமைச்சர் ரகுபதி அவர்கள் நேற்று முன்தினம் (28.03.2025) தலைமைச் செயலகம், சட்டப் பேரவை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-**

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் உண்மைக்குப் புறம்பாகவும், தமிழக மக்களின் நலனுக்கு எதிராகவும் பல்வேறு பொய் செய்திகளை இன்றைக்கு பரப்பிக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார். தமிழகத்தை பொறுத்த வரைக்கும், நாங்கள் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்று சொல்வதிலே எந்தவிதமான தவறும் கிடையாது.

கடந்த 20 ஆண்டுகால வரலாற்று புள்ளி விவரங்களை நாம் எடுத்து பார்த்தோமேயானால், அதிகமாக 2012 ஆம் ஆண்டில் நடந்திருக்கின்ற குற்றச் சம்பவங்கள் 1943, 2013ல் 1927. கடந்த ஆண்டில் 1540. மக்கள் தொகை பெருகுகிறது; குற்றச் சம்பவங்கள் பெருகுகிறது என்றெல்லாம் சொல்கின்ற இந்த நேரத்தில், அ.தி.மு.க. ஆட்சியில், அம்மையார் ஆட்சியிலும் சரி, எடப்பாடி ஆட்சியிலும் சரி அன்றைக்கு குற்றச் சம்பவங்களின் எண்ணிக்கையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே தெரியும். ஆனால், ஒரு சில தொடர் நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு அதன் மூலமாக ஏதோ தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்கின்ற தவறான தகவல்களை இன்றைக்கு எடப்பாடி பழனிசாமி பரப்பி வருகின்றார்.

**வேலைவாய்ப்பு உயர்வு கண்டு எடப்பாடி பொறாமை!**

அதற்குக் காரணம் தமிழகத்தை நோக்கி பல்வேறு தொழிற்சாலைகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த தொழிற்சாலைகள் தமிழக மக்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது. தமிழக மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படுகிறது. இதையெல்லாம் கண்டு பொறாமை கொண்டு தமிழகத்தின் வளர்ச்சியை தடுக்க வேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்றைக்கு ஆட்சியில் இருக்கிறது என்கின்ற காரணத்திற்காக, எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஏதோ தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது. இங்கே எதற்கும் அமைதிப் பூங்கா இல்லை என்ற தவறான தகவல்களை பரப்பி, மக்களை அச்சுறுத்தி வருகின்றாரே தவிர, எந்த இடத்திலும், எந்த காலத்திலும் அவர்களுடைய காலத்தில் நடைபெற்றது போல தூத்துக்குடி சம்பவமோ, பரமக்குடி சம்பவமோ அல்லது துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்களோ, கலவரங்களோ எதுவும் எங்களுடைய இந்த நான்கு ஆண்டு கால ஆட்சியில் கிடையாது. இது ஒன்றே போதும் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டான சம்பவம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**துணை முதல்வர் பதிலுரையை புறக்கணிக்கும் செயல்!**

இன்றைக்கு சட்டமன்றத்தில், ஜீரோ நேரத்தில் பேசுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் என்கின்ற முறையில், எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் சட்டப்பேரவை தலைவர் அவர்களிடத்தில் கேட்டார்கள். ஆனால், அவர்களுடைய 10 ஆண்டு காலத்தில் எழுதப்பட்ட ஒரு நீதி. அதாவது சட்டமன்றம் துவங்குவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக ஜீரோ நேரத்தில் நாங்கள் என்ன பிரச்சினையை கிளப்ப இருக்கிறோம் என்பதை பற்றிய புள்ளிவிபரத்தை சட்டப் பேரவை தலைவர் இடத்திலே தந்தால் அவர் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பி பதிலை பெற முடியும்.

அமைச்சர் பதில் இல்லை என்று சொல்லிவிட்டால் பிரச்சினை மட்டும் எழுப்ப முடியும். ஆனால், இன்றைக்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக அல்லாமல், சட்டப்பேரவை துவங்குவதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு குறைந்தது 7 அல்லது 8 நிமிடங்களுக்கு முன்னால், கொறடா அவர்கள் சட்டப்பேரவை தலைவர் இடத்தில் நாங்கள் காவல்துறையைப் பற்றி ஒரு பிரச்சினையை எழுப்பப் போகிறோம் என்று சொன்னாரே தவிர, என்ன பிரச்சினையை எழுப்பப் போகிறோம் என்பதை கூட அவர்கள் சொல்லவில்லை. எழுத்து மூலமாக எழுதித் தரவில்லை. ஆனால், ஜீரோ நேரத்தில் எழுந்து கொண்டு எங்களைப் பேச அனுமதிக்க மறுக்கிறீர்கள் என்று சத்தம் போடுவது, எங்களுடைய துணை முதலமைச்சர் உடைய பதிலுரையை புறக்கணிக்க வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு அவர்கள் செய்திருக்கும் செயல் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



**பேரவைத் தலைவரை அவமரியாதை செய்வதா?**

இந்த அரசை பொறுத்தவரைக்கும், எதிர்க்கட்சிகளுக்கு தான் இன்றைக்கு அதிகமான அளவில் வாய்ப்பை தருகின்ற முதலமைச்சராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று சொல்லுகின்ற முதலமைச்சர். ஆனால் அரை மணி நேரத்திற்கு முன்னால் கொடுக்க வேண்டும் என்கின்ற விதி இருக்கும் போது, இங்கே நாங்கள் பத்து நிமிடங்களுக்கு முன்பாக ஒரு பிரச்சினையை கிளப்ப போகிறோம் என்று சொல்லி விட்டு, அது கூட என்ன பிரச்சினை என்பதை சொல்லாமல் இருந்தால், எப்படி அங்கு பதில் சொல்ல முடியும்.

எங்களுடைய முதலமைச்சர் அவர்களிடத்திலேயே பதில் இருக்கிறது. ஆனால், அதற்காக சட்டத்தை மீறி எதையும் செய்யக்கூடாது என்பதற்காக சட்டப்பேரவை தலைவர் அவர்கள், உங்களுக்கு நான் அனுமதி கொடுக்க முடியாது. நீங்கள் அரை மணி நேரத்திற்கு முன்னால் வந்து தகவலை சொல்லவில்லை என்று சொன்னால் அது குற்றமா? அது தண்டனைக்கு உரியதா? அல்லது அவர்களை அசிங்கப்படுத்துவதா அவமாரியாதை செய்வதா? இவர்கள்தான் சட்டமன்றத்தை அவமரியாதை செய்கின்றார்களே தவிர, இன்றைக்கு திராவிட முன்னேற்ற கழகம் சட்டமன்றத்தினுடைய மாண்புக்கு மரியாதை தருகின்ற அமைப்பாக இருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**காவல் துறையை இழிவுபடுத்தும் செயல்!**

அதைப் போல, உங்களை எல்லாம் சந்திக்கின்ற பொழுது உசிலம்பட்டியில் நடந்த ஒரு சம்பவம் பற்றி சொல்லியிருக்கிறார். அந்த சம்பவம் ஒரு காவல்துறையைச் சார்ந்த ஒரு காவலர் சம்பந்தப்பட்ட சம்பவம். ஆனால், அது அவர்களுக்குள்ளே அவர்களது உறவினர்கள் அவர்களுக்குள்ளே உண்டான பகை சம்பந்தமாக அந்த காவலர் தன்னுடைய பணியில் இல்லாமல் தன்னுடைய தோட்டத்தில் இருக்கின்ற போது அவர்களுக்குள் நடந்த ஒரு சம்பவத்தை சொல்லி இருக்கிறார். காவலருக்கே இந்த ஆட்சியிலே பாதுகாப்பு இல்லை என்று சொல்கிறார் என்று சொன்னால், இதை விட வெட்கக்கேடு என்னவாக இருக்க முடியும். வீட்டில் சென்று அவர் இருக்கும் போது அவர்களின் உறவினர்களுக்கும், அவர்களுக்கும் இருக்கக்கூடிய பிரச்சினை. அதில் யார் யார் எல்லாம் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு காவல் துறை கண்டறிந்திருக்கிறது. குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்படுவார்கள்.

ஒரு குற்றச்சம்பவம் நடந்தவுடன், கைது செய்து அந்த குற்றத்திற்கு காரணமானவர்களை சட்டத்தின் முன்னால் நிறுத்துவது தான் கடமை. ஈரான் நாட்டுக் கொள்ளையர்கள் என்று சொல்லப்படுபவர்கள் செயின் பறிப்பில் ஈடுபட்ட மூன்று மணி நேரத்தில் நம்முடைய காவல்துறை விமானத்தை நிறுத்தி அவர்களை கைது செய்து கொண்டு வந்து சேர்த்திருக்கிறது என்று சொன்னால், இதைவிட சிறந்த காவல் துறை இந்தியாவில் எந்த மாநிலத்தில் இருக்கிறது என்பதை மனசாட்சி உள்ள ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்தாக வேண்டும். அந்த அளவுக்கு நம்முடைய காவல்துறை சிறப்பாக செயல்படுகிறது. ஆனால், அவர்களை நோகடிக்கும் வண்ணம் அவர்கள் சிறப்பாக செயல்படவில்லை. அவர்கள் கோட்டை விட்டுவிட்டார்கள் என்றெல்லாம் குற்றச் சாட்டுகளை சொல்லி அவர்களை அசிங்கப்படுத்தி அவர்களின் வேகத்தை தடுக்கின்ற வகையில் அவர்களுக்கு மனச்சோர்வை உருவாக்குகின்ற வகையில், இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு காவல் துறை எந்த குற்றத்தையும் கண்டுபிடிப்பதற்கு நிச்சயமாக, உடனடியாக கண்டுபிடிப்பதற்கு தயாராக இருக்கிற ஒரு துறை. கண்டுபிடித்து குற்றவாளிகளை சட்டத்தின் முன்னால் நிறுத்துகின்ற ஒரு துறை. எனவே எப்படி இராணிய கொள்ளையர்கள் என்று சொல்லப்படுகின்ற மராட்டியத்தை சேர்ந்தவர்களை நாங்கள் உடனடியாக 3 மணி நேரத்திற்குள் கைது செய்து இருக்கின்றோமோ, அதுபோல, எந்த சம்பவத்தில் ஈடுபட்டு இருந்தாலும் அந்த சம்பவம் நடந்த உடனேயே அவர்களை கைது செய்து சட்டத்தின் முன்னால் நிறுத்துகின்றோம். ஒரு சம்பவம் எங்கே நடக்க போகின்றது என்பதை யாரும் ஜோசியம் பார்க்க முடியாது. உங்கள் மனசாட்சிக்கு தெரியும். இங்கே இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் மனதில் என்ன இருக்கிறது என்பது தெரியாது. ஆனால், நடந்து விட்டால் நடந்ததை தடுக்க வேண்டும்; தெரிந்தால் தடுக்க வேண்டும். எங்களது knowledgeக்கு வந்ததை தடுத்திருக்கிறோம். நடப்பதை தடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பெண்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்குகிறார்கள்!**

அதேபோல் தவறாக சிவகங்கையில் ஒரு பெண் டாக்டர் கடத்தப்பட்டார் என்ற ஒரு பொய்யான தகவலை இங்கே சொல்லி இருக்கின்றார். அங்கே டாக்டர் கடத்தப்படவில்லை. அங்கே நடத்த சம்பவம் உடனடியாக தடுக்கப்பட்டிருக்கிறது. கடத்தலில் ஈடுபடவில்லை இருசக்கர வாகனத்தில் வந்திருக்கிறார்கள். அங்கே ஒரு சம்பவம் நடத்திருக்கிறது. அதற்கு காரணமானவர்களை இன்றைக்கு அரசாங்கம் கண்டுபிடித்து இருக்கிறது. எனவே, கடத்தல் என்று சொல்வதும், அங்கேயும் தவறான ஒரு பிரச்சாரத்தை செய்கின்றார்கள். அதற்கு காரணம் பெண்கள் மத்தியில் ஒரு அச்சத்தை உருவாக்க வேண்டும். பெண்கள் மத்தியில் வெளியில் நடமாடுவதை தடுக்க வேண்டும். இன்றைக்கு பெண்கள் தான் தமிழ்நாட்டில் சுதந்திரமாக உலா வந்து 41% பெண்கள் வேலைக்குச் செல்கின்ற மாநிலமாக தமிழகம் இருக்கின்றது. ஒவ்வொரு வீட்டிலும் இன்றைக்கு பணப்புழக்கம் அந்த பெண்கள் மூலமாக தன்னுடைய சொந்த வருவாயின் மூலமாக அந்த குடும்பத்தை காப்பாற்றும் அளவிற்கு வந்திருக்கிறார்கள். எனவே இதை கண்டு பொறுக்க முடியாமல், பெண்களுக்கு அச்சத்தை உருவாக்குவதற்கும் இப்படிப்பட்ட ஒரு பொய்யான குற்றச்சாட்டுகளை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் குற்றங்கள் குறைந்து இருக்கிறது என்று சொல்கிறீர்கள்? எந்த குற்றங்கள் குறிப்பாக குறைந்து இருக்கிறது அது பற்றி .....

பதில் கடந்த ஆண்டில், குற்றம் மொத்தமாக ஆதாயக் கொலைகள் 71, அதே நேரத்தில் 2012இல் 137, 2013இல் 121, கடந்த ஆண்டில் 71. எனவே, எந்த குற்றமும் குறைந்திருக்கிறது. எண்ணிக்கையை பொறுத்த வரைக்கும் 1943. எங்கள் ஆட்சியில் கடந்த ஆண்டு 1540. எனவே, எல்லா வகையிலும் குறைந்திருக்கிறது. ஆனால், சில குற்றச் சம்பவங்கள் இன்றைக்கு தைரியமாக வந்து புகார் கொடுப்பதால் இன்றைக்கு போக்சோ வழக்குகள் அதிகமாக தெரிகின்றனவே தவிர, அதற்கு இந்த அரசு கொடுத்திருக்கும் தைரியம் தான் அதற்கு காரணம்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.

---

## மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் பிற மாநிலங்களிலும் செயல்படுத்தப்படுகிறது!

# முதல்வரின் திட்டங்கள்; இந்தியாவிற்கே வழி காட்டும் திட்டங்களாகும்!

## சட்டப்பேரவையில் – திருச்சி கிழக்கு – இனிகோ இருதயராஜ் பேச்சு!

சென்னை, மார்ச் 30-

சட்டப்பேரவையில் திருச்சி கிழக்குத் தொகுதி உறுப்பினர் முனைவர் இனிகோ இருதயராஜ் பேசுகையில் முதல்வரின் திட்டங்கள் இந்தியாவிற்கே வழி காட்டும் திட்டங்களாக அமைந்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் இனிகோ இருதயராஜ் பேசியதாவது:

**முனைவர் த. இனிகோ இருதயராஜ்:** கொடுமையான புலி, சிங்கங்களும், நயவஞ்சகமான நரிகளும் நிரம்பிய காட்டுக்குள், ஆடுகளை அதன்பாட்டுக்கு மேய விட்டு, நாடு நாடாக சுற்றிக்கொண்டிருப்பவர் நல்ல மேய்ப்பன் அல்ல. அப்படியென்றால் நல்ல மேய்ப்பன் யார்? தன்னைச் சார்ந்துள்ள கோடிக்கணக்கான ஆடுகளுக்கு முன்னால் நெஞ்சை நிமிர்த்தி வழிகாட்டுபவன் தான் நல்ல மேய்ப்பன். தேடி அலைந்து, நல்ல மேய்ச்சல் நிலங்களை காண்பித்து ஆடுகளுடைய பசி தீர்ப்பவன் நல்ல மேய்ப்பன். தன்னை நம்பியுள்ள ஆடுகளை 24 மணி நேரமும் கண் காணித்து, வேட்டைக்காரர்களிடமிருந்து காப்பாற்றுபவர் நல்ல மேய்ப்பன்.

ஆனால், உலக அளவில் அங்கீகாரம் வந்துவிட்டதாக எண்ணிக் கொண்டு, அதிகாரம் தலைக்கேறி, தமிழ்நாட்டை ஏய்ப்பவர்கள் மத்தியிலே அன்பால், தாயுள்ளத்தால், மொழிப் பற்றால், இனப்பற்றால், ஓய்வறியா உழைப்பால், பாசத்தோடு இந்த தமிழ் நாட்டு மக்களுக்கு நல்ல மேய்ப்பராக, நல்ல ஆயனாக இருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கலந்த வணக்கங்களை காணிக்கையாக்குகின்றேன். துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், பத்திரிகை நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம்.

தமிழ்நாடு மட்டுமல்ல, தமிழன் எங்கெல்லாம் வாழ்கிறானோ, அந்த கடைக்கோடி தமிழனுக்கும் இந்த ஆட்சியினுடைய திட்ட பலன்கள் சென்றடைய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, எல்லோருக்கும் எல்லாம் என்கின்ற உன்னத சிந்தனையில் உருவாக்கப்பட்டிருக்கிறது இந்த நிதி நிலை அறிக்கை. இந்த நிதி நிலை அறிக்கையில் மிகச் சிறப்பான சமூகநலத் திட்டங்களை மட்டும் குறிப்பிட்டு காட்டி, நகராட்சி நிர்வாகத் துறைக்கு கோரிக்கை வைக்கின்றேன்.

Madras Presidency என்ற பெயரை 'தமிழ்நாடு' என்கின்ற அழகான பெயராக மாற்றி, பெயரின் வாயிலாகவே தமிழ் சமுதாயத்திற்கு பெருமை சேர்த்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணா வழியிலே மூன்றாம் பாலினத்தவருக்கு 'திருநங்கை' என பெயர் சூட்டி, அந்த சமுதாயத்திற்கு சுயமரியாதை ஏற்படுத்தி கொடுத்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

**திருநங்கைகளுக்கு அங்கீகாரம்!**

அதேவழியில் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் திருநங்கைக்கு இலவச பேருந்து பயணம், ரூபாய் 1,500/- ஓய்வூதியம், மகளிர் உரிமைத் தொகை என கொடுத்தது மட்டுமல்லாமல், நாமக்கல், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் அ.ரியா என்கிற திருநங்கைக்கு அரசியல் அங்கீகாரம் அளித்து, அனைத்து மாநிலங்களுக்கும் முன்மாதிரி மாநிலமாக திகழ வைத்தவர் முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள். அதையெல்லாம் விடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையில் பக்கம் 41, para 53-ல் அறிவித்திருக்கிற அறிவிப்பு என்னவென்றால், கல் மனதோரையும் கரைக்கின்ற அறிவிப்பு.

எல்லோருக்கும் எல்லாம் என்ற உன்னத நோக்கத்தை வெளிப்படுத்துகின்ற கிரீடம் போன்ற அமைப்பு. வாழ வழிதெரியாமல், தன் நிலையை எண்ணி கண்ணீர் விட்டு மூலையில் முடங்கி traffic signal-களில் நின்று யாசகம் பெற்று பிறரிடம் கையேந்தி தம் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்த திருநங்கையர்களுடைய சமுதாயத்திற்கு கண்ணியமான வாழ்வை உறுதிசெய்திட, எங்கு கையேந்தி நின்றார்களோ, அதே இடத்தில் ஊர்க் காவல் படை வீராங்கனைகளாக நின்று போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் பணியிலே ஈடுபடும் விதமாக உத்தரவிட்ட சமூக நீதிக் காவலர் அண்ணன் தளபதி அவர்களுக்கு ஒட்டுமொத்த திருநங்கை சமுதாயம் மட்டுமல்ல; நெஞ்சில் ஈரமுள்ள அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தியாவினுடைய முதன்முறையாக பெண்களுக்கு சொத்துரிமை வழங்கியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். சொத்திலே உரிமை மட்டும் போதுமா, அந்த உரிமையைத் தக்க வைத்துக் கொள்ள சொத்துப் பதிவுக் கட்டணத்தில் இந்தியாவின் எந்த மாநிலத்திலும், எந்த பிரிவினருக்கும் சலுகை இல்லாத சூழலிலே, பெண்களுக்கு 1 சதவிகிதம் கட்டணச் சலுகை வழங்கி இந்தியாவின் role model ஆட்சி நடத்திக் கொண்டிருப்பவர் முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள்.

**பிற மாநிலங்களும் பின்பற்றும் திட்டம்!**

ஒரு காலத்திலே, திட்டங்களைத் தீட்டினார்கள் என்றால், அதுவெல்லாம் தீட்டிய வேகத்திலே மறைந்துபோய்விடும். இன்றைக்குத் தமிழக அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிற இந்தத் திட்டங்களை எல்லாம் பல மாநிலங்களில் copy-paste செய்து கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்று மட்டும்தான், பெருமைமிகு மகளிர் உரிமைத் தொகை திட்டம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை தொடங்கியபோது, ஒன்றியத்தில் ஆள்பவர்கள் இலவசம் கொடுப்பதை 'Revadi culture' என்று ஏளனம் செய்தார்கள். இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக செயல்படுவதையும், 1 கோடியே 15 இலட்சம் பெண்கள் நேரடியாகப் பயன்படுவதையும் பார்த்த பிறகு என்ன செய்தார்கள் தெரியுமா? Mahila Samridhi Yojana என்று திட்டத்திற்கு பெயர் சூட்டி, இப்போது டெல்லியில் ஜெயித்தார்களே, டெல்லியினுடைய முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா அவர்கள் 8-3-2025 நம்முடைய முதலமைச்சர் அவர்களின் மகளிர் உரிமைத்தொகை திட்டத்திற்கு அறிவிப்பை அங்கு வெளியிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

அதேபோல, மகாராஷ்டிரா மாநிலத்திலே நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மகளிர் உரிமைத்தொகை திட்டத்திற்கு



என்ன பெயர் என்று தெரியுமா? Mukhyamantri - Majhi Ladki Bahin Yojana எங்கள் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த திட்டத்தை மட்டுமல்ல; செயல்படுத்தும் விதத்தையும் பார்த்து copy அடிக்கிறார்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. டெல்லியில் வாழும் மகளிரும், மகாராஷ்டிராவில் வாழும் மகளிரும், பாண்டிச்சேரியில் வாழும் மகளிரும், ஆந்திராவில் வாழும் மகளிரும் எங்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், 'Gujarat model' முடிந்துவிட்டது, 'திராவிட மாடல்' இந்தியாவிற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது, என்பதுதான் நிசப்தமான உண்மை (மேசையைத் தட்டும் ஒலி). நகராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரை கிராமப்புற பகுதிகளின் வளர்ச்சிக்கு வேளாண் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஒன்றிய அரசினுடைய பல்வேறு துறைகள் பணியாற்றுகின்றன. ஆனால், நகர்ப்புற வளர்ச்சிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மட்டும்தான் நகர்ப்புற வளர்ச்சிக்கு உதவுகின்றன.

-2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நகர்ப்புற பகுதிகளில் உள்ள மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே குடிநீர் இணைப்பு, பொது சுகாதாரம், இணைப்புச் சாலைகள், தெருவிளக்குகள், நவீன மின் மயானம் மற்றும் நூலகம் என கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 4 ஆண்டுகளில் ரூ.4,132 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்த ஆண்டில் மட்டும் ரூ.2,000 கோடி ஒதுக்கீடு செய்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைக் கூறுகிறோம். திருச்சி மாநகராட்சிக்கு

Asia-விலேயே மிகச் சிறந்த பஞ்சப்பூர் பேருந்து நிலையம் ரூ.571.31 கோடி மதிப்பீட்டிலான சாலைப் பணிகள் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் என்று பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்த முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் மனதார நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடல் மட்டத்தைவிட 78 மீட்டர் உயரத்திலும், தமிழகத்தின் மையத்திலும் அமைந்துள்ளதுதான் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. 167.23 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளையும் இணைக்கின்ற மாநகரம் திருச்சி. எனவேதான், தமிழகத்தினுடைய இரண்டாவது தலைநகரமாக திருச்சியை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துக் கொண்டே இருக்கிறோம். திருச்சிராப்பள்ளி மாநகராட்சியைப் பொறுத்தவரை, 5 கோட்டங்கள், 65 வார்டுகள், 4 சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகள் உள்ளன. திருச்சி (மேற்கு) தொகுதிக்கும் திருச்சி (கிழக்கு) தொகுதிக்கும்தான் முழுவதுமாக இந்த மாநகராட்சியின்கீழ் வருகிறது. திருச்சி மேற்கிலே 22 வார்டுகளும், திருச்சி கிழக்கிலே 23 வார்டுகளும், திருவெறும்பூர் 13 வார்டுகளும், ரீரங்கம் 7 வார்டுகள் என்கின்ற அமைப்புரீதியாக உள்ளது. 36 சதவிகிதம் திருச்சி (கிழக்கு) தொகுதியைச் சார்ந்தது. மாநகராட்சி நிதிநிலை அறிக்கையிலே 2021-2022-ல் 875.28 கோடியிலே திருச்சி (கிழக்கு) தொகுதிக்கு 71.55 கோடி 8 சதவிகிதமும், 2022-2023-ல் 1,310.18 கோடியில் ரூ.100 கோடி ரூபாயும் 7.5 சதவிகிதமும், மொத்தமாக 4 வருடங்களில் 4,808.43 கோடியில் 370.15 கோடியில் 7.86 சதவிகிதமும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

எனவே, திருச்சி (மேற்கு) தொகுதியும், திருச்சி (கிழக்கு) தொகுதியும் சேர்ந்து முழுவதுமாக மாநகராட்சி தொகுதிகள். மாநகராட்சி general fund-லே திருச்சி (மேற்கு) தொகுதிக்கு ரூ.408 கோடியும், திருச்சி (கிழக்கு) தொகுதிக்கு ரூ.108 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, அமைச்சர் அவர்கள், திருச்சிக்கு பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அவர்களிடம் கேட்டு பெற்றுத் தந்துள்ளீர்கள். என்னுடைய திருச்சி (கிழக்கு) தொகுதியை அமைச்சரவர்கள் திருச்சி (மேற்கு) தொகுதிபோல் பாவித்து இந்த நிதியாண்டு budget-லே அதிக நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்ற அருமையான கோரிக்கையை அமைச்சர் அவர்களிடம் வைக்கின்றேன்.

**அனைவருக்கும் சுத்தமான குடிநீர்!**

எனது திருச்சி (கிழக்கு) தொகுதியில் சில இடங்களிலே தண்ணீர் பற்றாக் குறை உள்ளது. அமைச்சர் அவர்களிடம் கூறியுள்ளேன். முதலமைச்சர் அவர்களின் உன்னத திட்டமான அனைவருக்கும் 24 மணி நேரமும் சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தும் விதமாக zone 2-ல் அமைந்துள்ள பழைய lorry shed பகுதியிலும், இருதயபுரம் பெரியார் நகர் பகுதியிலும், தோப்புத் தெரு பகுதியிலும் உயர்மட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர ஏற்கெனவே கருத்துரு பெறப்பட்டு அமைச்சர் அவர்களுடைய ஒப்புதலுக்கு காத்திருக்கிறது. தாயுள்ளத்தோடு அமைச்சர் அவர்கள் அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன். திருச்சி புழுவிக் கரையிலிருந்து, கீழதேவதானம், வடக்கு தாராநல்லூர் ஆகிய பகுதிகளில் செல்கின்ற இரட்டை வாய்க்கால் குப்பைகளும், புதர்களும் நிரம்பி கிடக்கின்றன. அதற்கும் estimate போடப்பட்டு அமைச்சர் அவர்களிடம் அதிகாரிகள் தந்துள்ளார்கள். அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன்.

கழக தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின் படி திருச்சியின் மையத்தில் அமைந்துள்ள மகளிர் சிறைச் சாலையை மாற்றி நீண்ட நாள் கோரிக்கையான காந்தி மார்கெட்டை இடம் மாற்றம் செய்யாமல் காந்தி மார்கெட்டை விரிவாக்கம் செய்து குளிர்பதனக் கிடங்குகளை அமைத்துத் தர வேண்டும். காந்தி மார்கெட் சீர்செய்ய DPR தயாரிக்கப்பட்டு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதைக் கூறிக்கொள்கிறேன். எனது சட்டமன்ற அலுவலகம் அருகே அமைந்துள்ள பன்னடுக்கு car parking முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, இன்னும் பயன்பாட்டிற்கு வரவில்லை. tender போட்டும் யாரும் எடுக்கவில்லை என்கின்ற குறை; மாநகராட்சியே அதை எடுத்து நடத்திட வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன்.

**வாழைக்காய் ஆராய்ச்சி மையம்!**

E.B. Road-ல் அமைந்துள்ள Murugan talkies-ஐ சீர் செய்து மாநகராட்சியினுடைய திருமண மண்டபமாக மாற்றித் தர வேண்டும். இப்போது மூடப்பட்டுள்ள நிலையில் உள்ளது என்பதையும் கூறிக்கொள்கி றேன். வாழைக்காய் மண்டியில் இடம் இல்லாத காரணத்தினால் வாழைத்தார் எடுத்து வரும் விவசாயிகள் road-லேயே அதை இறக்கியும், அதன் கழிவுப் பொருட்கள் மலைபோல் குவிந்து துர்நாற்றம் ஏற்படுகின்ற நிலை இருக்கிறது. எனவே, மாநகராட்சியினுடைய முன்னாள் Commissioner வாழைக்காய் ஆராய்ச்சி மையத்தைத் தொடர்புகொண்டு அந்த கழிவுப் பொருட்களை வீட்டு உபயோகப் பொருட்களாக மாற்ற திட்டம் அமைத்தார்கள். இதனால், பல பெண்களுக்கு, பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற நிலை உருவானது. எனவே, அந்தத் திட்டத்தைத் தொடர வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக அடுக்கு மாடி குடியிருப்பு அமைக்கப்பட்டுள்ளது. அதிலே 40 பயனாளிகள் இன்றும் குடியிருப்பு கிடைக்காமல் அவதிப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அங்கே மாநகராட்சி நிர்வாகிகளுக்கு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தங்களுக்கு ஒப்படைக்கவில்லை என்று மாநகராட்சி அதிகாரிகளும் தொடக்கத்தில் இருந்து வரியை கேட்கிறார்கள் என்று வாரியத்தில் நிதி இல்லை என்று வாரியத்தின் அதிகாரிகளும் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களிடம் வரி வாங்க முடியாத நிலை. இன்றிலிருந்து வரி போடுங்கள் நாங்கள் கட்டுகிறோம் என்று மக்களும் தலையிட்டு அமைச்சர் அவர்கள் அதை தீர்த்துத் தர வேண்டுமென்று சொல்லி முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். 14 இலட்சம் குழந்தைகள் பயனடைகின்ற திட்டத்திலே அரசு உதவிபெறும் சிறுபான்மை தமிழ்வழிக் கல்வி குழந்தைகளுக்கு விரிவுபடுத்தித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். முதலமைச்சர் அவர்கள் முதல் தவணையாக அரசு உதவிபெறும் சிறுபான்மை தமிழ்வழி கிராமப்புற பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்து தந்தார்கள்.

150 வருடங்களுக்கு மேலாக பழமைவாய்ந்த மீனவ மக்களால் வணங்கப்படுகிற தேவாலயமான மூக்கேரியில் அமைந்துள்ள புனித யாக்கோபு தேவாலயத்திற்கும், திருவாரூர் மாவட்டம், பெரும்பனையூரில் அமைந்துள்ள புனித சூசையப்பர் தேவாலயத்திற்கும், 1816ஆம் ஆண்டு வீரமா முனிவரால் கட்டப்பட்ட அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா தேவாலயத்திற்கும், 200 வருடங்கள் பழமைவாய்ந்த மதுரை பசுமை மலை CSI Whitin நினைவு தேவாலயத்திற்கும் முன்னுரிமை தந்து நிதியொதுக்கி தர வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றேன்.

TET exam பற்றி சொல்ல வேண்டும். சிறுபான்மையினர் நடத்துகிற கல்வி நிறுவனங்களுக்கு TET exam தேவை இல்லை என்கிற உயர் நீதிமன்ற தீர்ப்பினை ஏற்றுக்கொண்டு உச்ச நீதிமன்றத்தில் இருந்த வழக்கை வாபஸ் வாங்கி கிட்டத்தட்ட 10,000 ஆசிரியர்கள் பயன்பெறுகிற வகையிலே முதலமைச்சர் அவர்கள் எங்கள் கோரிக்கையை ஏற்று நடவடிக்கையை எடுத்துள்ளார்கள். தினந்தோறும் சிறுபான்மையினர் பள்ளியினுடைய ஆசிரியர்கள் முதலமைச்சர் அவர்களை வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பயனை பள்ளிகள் பெறும் வகையிலே அரசாணை தர வேண்டுமென்று கோரி, நான் இந்த சிறுபான்மை நலன் குறித்து சட்டசபையிலே பேசப் போகிறேன். எனக்கு முக்கியமான சிறுபான்மை பிஷப்மார்கள், தலைவர்களை தொடர்பு கொண்டு கேட்டேன். அதற்கு, அவர்களிடம் என்ன வேண்டுமென்று கேட்டேன். அதற்கு அவர்கள் பதில் என்ன தெரியுமா சொன்னார்கள்! கேட்டதை எல்லாம் கொடுத்த ஒரே முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). கேட்பதற்கு ஒன்றுமில்லை, நாம் கேட்பதற்கு முன்பே எல்லாவற்றையும் நிறைவேற்றித் தந்துள்ளார்கள் என்று புலகாங்கிதம் அடைந்தார்கள். ஒட்டுமொத்த கிறிஸ்தவ சமுதாயத்தின் சார்பாக என்றைக்கு என்றைக்கும் நன்றி உள்ளவர்களாக நாங்கள் இருப்போம் என்று கூறி, இந்த அருமையான வாய்ப்பை பேசுவதற்கு அளித்ததற்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு இனிகோ இருதயராஜ் பேசினார்.